

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி ஹெலன்டேவிட்சன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்டின், திருமதி புஷ்பலீலா, மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி. கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி ஹெலன்டேவிட்சன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்டின், திருமதி புஷ்பலீலா, மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 1800 பேருக்கு வேலைவாய்ப்பு! ரூ. 117.65 கோடியில் திருநெல்வேலி – விருதுநகர்–

# ஈரோடு மாவட்டங்களில் மூன்று டைடல் நியோ பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்!

**சென்னை, பிப்.26-**

**ரூ.117.65 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் சுமார் 1800 தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மூன்று டைடல் நியோ பூங்காக்களுக்கு - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.2.2026) அடிக்கல் நாட்டுகிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி கிராமத்தில் 39.06 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், கூரைக்குண்டு கிராமத்தில் 38.72 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், கங்காபுரம் கிராமத்தில் 39.87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், என மூன்று டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு இன்று (26.2.2026) தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டுகிறார்.

இப்பூங்காக்கள் ஒவ்வொன்றும் சுமார் 600 தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் கட்டப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள்**

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

மேலும், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைத்திட முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கும் முதலமைச்சர் அவர்களால் நேற்றையதினம் (25.2.2026) அடிக்கல் நாட்டப்பட்டது.

இவை மட்டுமின்றி நாகப்பட்டினம், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, விரைவில் இவற்றின் கட்டுமானப்பணிகள் தொடங்கப்படவுள்ளன.

**திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுதல்**

தகவல் தொழில்நுட்பத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் முயற்சியின் தொடர்ச்சியாக, திரு நெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், ரெட்டியார்பட்டி கிராமத்தில், 39.06 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கூரைக்குண்டு கிராமத்தில் 38.72 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கங்காபுரம் கிராமத்தில் 39.87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு இன்றையதினம் (26.2.2026) முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

இவை ஒவ்வொன்றும் சுமார் 60,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் மூன்று தளங்கள் கொண்டு IT, ITeS, BPO's மற்றும் Start-ups போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் கட்டப்படவுள்ளன. இப்பூங்காக்கள், தலா 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் என மொத்தம் 1800 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அனைத்து அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

இந்த மினி டைடல் பூங்காக்களின் மூலம் அந்தந்த மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டத்திலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுவதுடன் அப்பகுதிகளின் சமூக-பொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் உதவிடும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

### பி.கே.சேகர்பாபு முன்னிலை! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமை! எழும்பூர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

# ரூ. 2.03 கோடியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

*சென்னை, பிப்.26-*

*தமிழ்நாடு துணை முதலமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின், எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன ஆரம்ப சுகாதார மையத்தைத் திறந்து வைத்தார்.*

*இந்நிகழ்விற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்தார்.*

*எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழகச் சட்டத் துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமை வகித்தார்.*

*இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ்குமார், மத்திய வட்டாரத் துணை ஆணையர் கௌஷிக், ஐ.ஏ.எஸ்., 108வது வார்டு மாமன்ற உறுப்பினர் எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.*

*எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் பல பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம், கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்டது. இதனால், சுப்பராயன் தெரு, கந்தன் தெரு, வேம்புலியம்மன் கோவில் தெரு, வைத்தியநாதன் தெரு, அருணாசலம் தெரு, அப்பாராவ் தோட்டம் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் பொது மக்கள், தமது மருத்துவ தேவைகளுக்கு வேறு மருத்துவமனைகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.*

*இந்நிலையில், "அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்ட ஆரம்ப சுகாதார மையத்தை அதே இடத்தில் கட்டித் தர வேண்டும்" என இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர்.*

*இக்கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 20.11.2024 அன்று இச்சுகாதார மையத்திற்கு அடிக்கல் நாட்டிக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார். ஒன்றரை ஆண்டுக்குள்ளாக கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் இச்சுகாதார மையம் நேற்று (25.02.2026) பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.*

*இந்நவீன சுகாதார மையத்தில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு கவனிப்பு உள்ளிட்டு 30 விதமான மருத்துவச் சிகிச்சை களும் ஆய்வகப் பரிசோதனைகளும் வழங்கப்படவுள்ளது.*

*இதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50,000 பேர் இச்சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காகத் தனியார் மருத்துவமனைகள், ஆய்வகங்களை நாடிச் செல்ல வேண்டியத் தேவையின்றி, தரமாகவும், எவ்விதக் கட்டணமின்றியும் இச்சேவைகளைப் பெற்றுப் பலன் அடைவார்கள்.*

*இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா. காந்தி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா. வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் இந்திரா காந்தி, அவைத் தலைவர் விஸ்வநாதன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், பகுதிப் பிரதிநிதிகள் ஆர்.செல்வராஜ், முனுசாமி, ஏ.யு.மணிவண்ணன்; வட்டப் பொருளாளர் வெங்கட்,*

*108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆ. சூர்யா, 58வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி. ராஜ்குமார், 77வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 77 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு. உதயநிதி, ச.சூர்யா; 78வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.வேலன், அ.ஜெகன்; 78 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.இ. மகேஷ்குமார், 99 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கப்பில்குமார், சு.குணா; செயற்குழு உறுப்பினர் பாபு, எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, தலைமைக் கழகப் பேச்சாளர் தேவநிதி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், கோமகன், ஜெ.சரவணன், எட்டு (எ) விஜயகுமார், கார்த்திகேயன், தன. பிரபாகர், பாகமுகவர் கவிதா, வேலு, சிவக்குமார், எல்.குணசேகர், எலிசா, சாந்தி, அசினாபேகம், கபிலன், நாகராஜ், புல்லாபுரம் சுந்தர், சத்யகலா, எழிலரசி, விஷால் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும், பகுதிவாழ் பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.*

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன் தலைமை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் 'மக்கள் முதல்வரின் மனிதநேய விழா' மாபெரும் வாழ்த்தரங்கம்!

## நடிகர் பிரபு - நடிகர் போஸ் வெங்கட் - கவிஞர் சினேகன் சிறப்புரை!

*சென்னை, பிப்.26*

*சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026, மனிதநேயம் 19, கழகத் தலைவர் அரசியல் திலகம்! கலையும் அன்பும் கலந்த இதயம்!! என்ற தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் இன்று வியாழக்கிழமை (26.02.2026), மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. அரங்கம், ரித்தர்டன் சாலை, டவுட்டனில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. எஸ். எம். நாதன் தலைமையில் மாபெரும் வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது.*

*இம்மாபெரும் வாழ்த்தரங்கில் திரை கலைஞர் இளைய திலகம் பிரபு, கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் நடிகர் போஸ் வெங்கட், மக்கள் நீதி மையம் இளைஞரணிச் செயலாளர் கவிஞர் சினேகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இக்கூட்டத்தில் மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் வி. சுதாகர், சொ. வேலு எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., பரிதி இளம் சுருதி எம்.சி., வே. உமா காந்த், எஸ் மணிமுடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வானவில் விஜய், அ. நிர்மலா தேவி, கோ. மணி, எஸ் சுந்தர்ராஜன் எம்.சி., பாத்திமா முசாபர் எம்.சி.,*

*எழும்பூர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன்,*

*சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ. பரந்தாமன், அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம். யாழினி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.*

*இறுதியில் 58வது வட்டச் செயலாளர் வி. விஜயகுமார், 58 (அ) வட்டச் செயலாளர் ஆர். பாபு (எ) சந்திரசேகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*




பா.ஜ.க.வின் எழும்பூர் பகுதி பொதுச்செயலாளர் எழும்பூர் சி.ரமேஷ், அக்கட்சியைச் சார்ந்த ஏனைய நிர்வாகிகள் 5 பேருடன், திராவிட முன்னேற்றக் கழக, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை நேரில் சந்தித்து தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் நெ.விஜயகுமார், ஆர்.புருஷோத்தமன், ந.கலையரசன், புரசைகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் பள்ளிப்பட்டு பேரூர், வெளிகரம், நெடியம், கொள்ளாலக்குப்பம் ஆகிய கிராமங்களில் உள்ள பயனாளிகளுக்கு அரசு சார்பில் இலவச வீட்டு மனை பட்டாக்களை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.ஜே.சீனிவாசன், சி.ஜே. செந்தில்குமார், பி.டி.சந்திரன், நிர்வாகிகள் பி.ரவீந்திரநாத், செங்கையா, ஆஞ்சநேயன், மணிமேகலை, ஜோதிகுமார், புஷ்பலதா, ஆறுமுகம், விஜியலு, சிரஞ்சீவி, குணசேகர், மோகன்ராஜ், பானுஜெகதீஸ், ராமதாஸ், அல்லி முத்து, கலில் ஜெகதீஸ், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.